### அரசு வழங்கும் ஊட்டச் சத்து உணவு - மருத்துவ உதவிக்கு - எழுத்தாளர் சரவணன் சந்திரன் பாராட்டு!

# ‘ஊட்டச் சத்தை உறுதிசெய்’ திட்டத்தின் வெற்றிக்குக் காரணமான அனைவர்க்கும் நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, மே 20 -**

**கழக அரசு ஆட்சிப் பொறுப் பேற்ற இரு மாதங்களில், சமூக நலத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அறிவித்தப்படி தமிழ்நாட்டை ஊட்டச்சத்துக் குறைபாடில்லா மாநிலமாக்குவதற்கான நடவடிக்கை களின் தொடர்ச்சியாக ‘ஊட்டச் சத்தை உறுதி செய்’ என்ற திட் டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**அத்திட்டம் சிறப்பாகச் செயல் படுவதை எழுத்தாளர் சரவணன் சந்திரன் முகநூலில் பாராட்டி எழு தியதைக் குறிப்பிட்டும், அதற்குக் காரணமான அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட அனை வருக்கும் நன்றி தெரிவித்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற இரு மாதங்களில் சமூகநலத்துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாட்டை ஊட்டச்சத்துக் குறைபாடில்லாத மாநிலமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியிருந்தேன்.

தொடர்ந்து எடுக்கப்பட்ட புள்ளி விவரம் எனக்கு மனவேதனை அளித்தது. தமிழ்நாட்டில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் பலர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் வயதுக்கேற்ற எடை, உயரமில்லாமல் மெலிந்து இருப்பது தெரியவந்தது. இதையடுத்து தமிழ்நாட்டின் குழந்தைகளைத் திடமானவர்களாக ஆக்கவேண்டும் என்ற உறுதியுடன் சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டத்தைக் கழக அரசு பொறுப்பேற்று இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாளில் அறிவித்தேன்.

சில வாரங்களில், ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளைக் கண்டறிய சிறப்பு மருத்துவ முகாமினை நீலகிரி மாவட்டம் முத்தோரை குழந்தைகள் மையத்தில் மே 21 அன்று தொடங்கி வைத்தேன்.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு பிப்ரவரி 28 அன்று ஏற்ற மிகு ஏழு திட்டங்களில் ஒன்றாக ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டத்தின்கீழ், 6 வயதுக்குட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 1 லட்சத்து 11 ஆயிரத்து 216 குழந்தைகளுக்குச் சிறப்பு உணவாக RUTF உணவு அளிப்பதையும், 6 மாதத்துக்குட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 11 ஆயிரத்து 917 குழந்தைகளுக்குத் தேவையான தாய்ப்பால் கிடைப்பதை உறுதி செய்யத் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துப் பெட்டகங்கள் வழங்குவதையும் தொடங்கிவைத்தேன்.

இதன்படி ஊட்டச்சத்து உணவு, மருத்துவ உதவி வழங்கி இத்தகைய குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் எந்த அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை எழுத்தாளர் சரவணன் சந்திரனின் இந்தப் பதிவு படம்பிடித்துக் காட்டுகிறது.



facebook

Saravanan Chandran

கடையில் வேலைபார்க்கும் தம்பி ஒருத்தன் அன்னை சத்யா நகரில் வசிக்கிறான். அவனுக்குச் சமீபத்தில்தான் குழந்தை பிறந்தது. பிறக்கையிலேயே எடை குறைந்த குழந்தை. அவனுடைய மனைவியுமே சிறுத்துப் போய்த்தான் திரிவார். விட்டால் அரை ப்ளேட் பிரியாணியைக் கூட ஐந்தாறு நாள் வைத்துத் தின்பார். “ஏம்மா நல்லா சாப்பிடறதுக்கு என்ன?” எனக் கேட்டால், “அவ்ளோதாண்ணே திங்க முடியுது” என்பார் பரிதாபமாக.

நேற்று திடீரென வந்து நின்ற அவன், “சார் ஒரு அரைமணி நேரம் வீடு வரைக்கும் ஓடிப் போய்ட்டு வந்திரவா? பால்வாடில அவசரமா வரச் சொல்றாங்க” என்றான். போய்விட்டு வந்தவனிடம் எதற்காக அழைத்தார்கள் என்று கேட்டேன். “செர்லாக் ரெண்டு பாக்கெட் குடுக்கறதுக்காக” என்றான். அவனிடம் ஆற அமர அதுபற்றிக் கேட்டேன். இதுவரைக்கும் பால்வாடியில் என்ன நடக்கிறது என்பது எனக்கு உண்மையிலேயே தெரியாது.

“மாசமா இருக்கறப்பயே அட்டை போட்டிருவாங்க. இதுவரைக்கும் ஆறாயிரம் ரூபாய் வரைக்கும் எனக்கு வந்திருக்கு. மிச்சம் பன்னெண்டாயிரம் மெது மெதுவா வந்திரும்னு சொல்லி இருக்காங்க. பையன் எடை குறைஞ்சு பிறந்ததால கூடுதல் கவனிப்பு. பேரிச்சம்பழம், ஹார்லிக்ஸ் பாட்டிலு, சத்து மாவு, அப்புறம் நெய் டப்பா, துண்டு, ஒரு ப்ளாஸ்டிக் டம்ளர், சத்து டானிக் ரெண்டு பாட்டில் போட்டு பாக்ஸ் தருவாங்க. அப்புறம் அப்பப்ப சத்துமாவு செர்லாக்குன்னு தந்துகிட்டே இருப்பாங்க” என்றான்.

எனக்கு வியப்பாக இருந்தது. “அவங்களே அப்பப்ப போனை போட்டு கொழந்தையை தூக்கிட்டு வரச் சொல்லுவாங்க. கொழந்தையை போட்டோ எடுத்து அவங்க உயரதிகாரிங்களுக்கு அனுப்பறதுக்கே பயந்துக்குவாங்க. எம்பொண்டாட்டியை ஒழுங்கா சாப்பிடமாட்டியா? பால் ஊறனும்லன்னு கடுமையா சத்தம் போடுவாங்க” என்றான்.

இறுதியாய், “ஒண்ணு சொல்ல மறந்திட்டேன் சார். பெத்த அப்பனை விட குழந்தையை நல்லா பாத்துக்குவாங்க” என்றபோது உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அரசுத் துறை ஒன்றைக் குறித்து அதன் பயனாளியே மகிழ்வாய் சொல்லும் விந்தையை எப்படிச் சுட்டிக்காட்டாமல் தவிர்ப்பது?

**‘முகநூல்’ அரசின் திட்டத்தைப் பாராட்டி, எழுத்தாளர் சரவணன் சந்திரன் வெளியிட்ட பதிவு!**



எழுத்தாளர்
**சரவணன் சந்திரன்**

இதற்குக் காரணமான அமைச்சர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி. தமிழ்நாட்டின் குழந்தைகள் அறிவார்ந்தவர்களாக திடமானவர்களாக வளர அவர்களின் ஊட்டச்சத்தை உறுதி செய்திடுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் சேர 2.63 லட்சம் பேர் விண்ணப்பம்!

*சென்னை, மே 20 - பிளஸ்2 தேர்வு முடிவு வெளியானவுடன் உயர் கல்வியில் சேர மாணவ மாணவிகள் விண்ணப்பித்து வருகின்றனர். வழக்கம் போல பி.இ., பி.டெக்., பொறியியல் படிப்புகளுக்கும், கலை அறிவியல் சார்ந்த படிப்புகளுக்கும் விண்ணப்பித்தனர். பி.ஏ., பி.காம்., பி.பி.ஏ., கம்ப்யூட்டர் சயின்ஸ் போன்ற பாடப்பிரிவுகளில் சேர மாணவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். குறிப்பாக பி.காம். (பொது), பாடப்பிரிவுகளுக்கு தேவை அதிகமாக உள்ளது.*

*அரசு கலை கல்லூரிகளில் மட்டுமின்றி தனியார் கல்லூரிகளிலும் முன்கூட்டியே நல்ல பாடப்பிரிவுகளை மாணவர்கள் தேர்வு செய்து சேர்ந்து வருகிறார்கள். 164 அரசு கலை கல்லூரிகளில் சேர கடந்த 8ந்தேதி முதல் ஆன்லைன் மூலம் மாணவர்கள் விண்ணப்பித்து வருகின்றனர். கடந்த சில வருடங்களாக ஏழை, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த மாணவமாணவிகள், அரசு கலைகல்லூரிகளை நோக்கி வருகிறார்கள். பி.காம். உள்ளிட்ட குறிப்பிட்ட சில பாடப்பிரிவுகளுக்கு அதிகளவில் மாணவர்கள் விண்ணப்பிக்கின்றனர். இதனால் ஒவ்வொரு வருடமும் இடங்கள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.*

*கடந்த ஆண்டை போல இந்த வருடமும் அதிக அளவில் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அரசு கலை அறிவியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க நேற்று கடைசி நாளாகும். இறுதி நாளாக இருப்பதால் நேற்று ஆயிரக்கணக்கானவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தும் வகையில் கம்ப்யூட்டர் மையங்களை நாடினர். சென்னை உள்பட தமிழகம் முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் மாணவ - மாணவிகள் கடைசி நேரத்தில் மையங்களுக்கு சென்று விண்ணப்பித்தனர்.*

*நேற்று முன்தினம் வரை 2 லட்சத்து 63 ஆயிரத்து 780 பேர் விண்ணப்பித்து இருந்தனர். அதில் 2 லட்சத்து 10 ஆயிரம் பேர் விண்ணப்ப கட்டணம் செலுத்தி உள்ளனர். இரவு வரை விண்ணப்பிக்க அவகாசம் இருப்பதால் இந்த எண்ணிக்கை 3 லட்சத்தை எட்டும் என்று உயர் கல்வித்துறை எதிர்பார்க்கிறது. கடந்த ஆண்டு 2 லட்சத்து 98 ஆயிரம் பேர் விண்ணப்பித்து இருந்தனர்.*

*தனியார் பள்ளிகளில் கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 25 சதவீத இடஒதுக்கீட்டில் ஏழை மாணவர்கள் சேர்ப்பதற்கான கால அவகாசம் நேற்று முன் தினத்துடன் முடிந்தது. தமிழகம் முழுவதும் 1 லட்சத்து 36 ஆயிரம் குழந்தைகள் விண்ணப்பித்து உள்ளனர். விண்ணப்பிக்க மேலும் ஒரு மாதம் கால அவகாசத்தை நீட்டித்து தர வேண்டும் என தனியார் நர்சரி பள்ளிகள் சங்க மாநில தலைவர் கே.ஆர். நந்தகுமார் தெரிவித்துள்ளார். ஏழை பெற்றோர் இத்திட்டத்தில் தங்கள் குழந்தைகளை சேர்க்க முக்கிய சான்றிதழ்கள் தேவைப்படுகிறது.*

*அதனை பெறுவதற்கு தாமதம் ஆவதால் குழந்தைகளை சேர்க்க கூடுதலாக அவகாசம் வழங்க வேண்டும் என்றார்.*

---

# தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழக தொழிலாளர் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 27.5.2023 சனிக்கிழமை காலை 11 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து மாநில நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடத்துவது தொடர்பாகவும்,

கழக தொழிலாளர் அணி சிறப்பாக செயல்படுவது தொடர்பாக ஆலோசனையும் நடைபெற உள்ளது.

**பி.டி.சி.ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

---

### பட்டாசு சில்லறை விற்பனை நிலைய வெடி விபத்தில்

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே 20 -

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு சில்லறை விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், பனையபட்டி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு சில்லறை விற்பனை நிலையத்தில் (17.5.2023) பட்டாசு உற்பத்தி செய்துகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் கோட்டைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார், த/பெ. அமிர்தராஜ் (வயது 35) என்பவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. தில்லைவில்லாளன்
### மே 20 (2008)



**திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர். திராவிட நாடு இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.**

**அண்ணாவின் ‘சந்திரரோதயம்’, ‘சந்திரமோகன்’, ‘நீதிதேவன் மயக்கம்’ ஆகிய நாடகங்களில் அண்ணாவுடன் இணைந்து நடித்தவர்.**

**நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.**

**மும்முனைப் போராட்டத்தின் போது கைதாகி சிறை சென்றவர்.**


**தலைவர் கலைஞர் அவர்கள், 1948ல் முரசொலி வார இதழில் இவரைத் தொடர்ந்து சிறுகதை, கட்டுரைகளை எழுத வைத்தார். தலைவர் கலைஞர் அவர்களிடம் தனிப்பாசம் கொண்டிருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மைனர் மோசஸ்
### மே 20 (1993)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு தீவிர அரசியலில் ஈடுபட்டு சென்னை நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.**

**சென்னை மாநகர மேயர் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“சிரித்த முகம் – செம்மாந்த நோக்கு – சிங்கத்தின் நடை – உடையணிந்து காட்சி தந்தால் ஒரு ராஜகம்பீரம் – இத்தனைக்கும் மேலாக உள்ளமோ கள்ளமொன்றில்லாத் தூய்மையின் இருப்பிடம்! தும்பை மலர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கல் உரையில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---


## கோயம்புத்தூர் மாநகராட்சி

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**கிழக்கு மண்டலம்**
**ஒப்பந்தப்புள்ளி தேதி மாற்றம் அறிவிப்பு**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)**

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 1 / 2023 நாள்: 15.05.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள்/ நேரம் | ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் / நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 5,6,7,8,9,22,23, 24,50,51,52,53,54,55,56,57, 58,59,60,61-க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் மற்றும் குடிநீர் விநியோக பணிகள் செய்தல். | 47 பணிகள் | 23.05.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 24.05.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in உதவி ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், கிழக்கு மண்டலம், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - 641 005. தொலைபேசி எண். 0422-2595950. Email : eastaee@gmail.com

**உதவி ஆணையர்**
**கிழக்கு மண்டலம்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

வெ.ஆ.எண். 211/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 18.05.2023

“ சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்”